செ. கு. எண்:312 நாள் :30.11.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 30.11.2013

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த திரு. பிச்சுமணி என்பவர் 9.11.2013 அன்று தேவனாபுரம் பகுதியில் மின்கம்பத்தில் ஏறி மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், குளத்துப்பாளையம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் ஒப்பந்தத் தொழிலாளியாகப் பணி புரிந்து வந்த திரு. கார்த்திக் என்பவர் 12.11.2013 அன்று குளத்துப்பாளையம் பகுதியில் மின்கம்பத்தில் ஏறி மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்கம்பம் சாய்ந்ததில், கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த பிச்சுமணி மற்றும் கார்த்திக் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த பிச்சுமணி மற்றும் கார்த்திக் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9